## TAMILNADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED EXPANSION OF FOUNDRY UNIT OF M/S. BRADKEN INDIA PRIVATE LIMITED AT S.F. NO 51/1A, 51/1B, 53/1A, 53/2, 58/1, 58/2, 59/2A, 59/2B, 60, 61/2, 57/1A, 54, 55/3, ORATHUKUPPAI VILLAGE, CHETTIPALAYAM, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT ON 26.02.2024 AT 11:00 AM AT M/S. KPR MARRIAGE HALL, CHETTIPALAYAM, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT.**

Present:

| | | | |
|---|---|---|---|
| 1 | Thirumathi. B. Anitha | : | **Special District Revenue Officer (LA – Airport), Coimbatore District** |
| 2 | Dr. R. Chandrasekaran | : | **District Environmental Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 3. | Mrs. D. Pricilla | : | **Assistant Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 4. | Thiru. S. Prabhu | : | **Assistant Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 5. | Thiru. B. Rajkumar | | Director, Bradken India Private Limited |
| 6. | Thiru. R. Rajendran | : | EIA Coordinator Eco Tech Labs India Private Limited |
| 7. | Public | : | 90 Nos. (List enclosed as Annexure) |

*********

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the **District Revenue Officer** Coimbatore, and all general public who are attending the public hearing for the Proposed Expansion of Casting Unit at S.F. No 51/1A, 51/1B, 53/1A, 53/2, 58/1, 58/2, 59/2A, 59/2B, 60, 61/2, 57/1A, 54, 55/3, Orathulkuppai Village, Madukkarai Taluk, Coimbatore District.

It is required to obtain Environmental Clearance (EC) mandatorily from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India for certain projects including foundry activity after conducting Public Hearing. The public hearing minutes shall be submitted to State Environmental Impact Assessment Authority (SEIAA). He added that the public notice informing the conducting of Public Hearing was published in **"Dinathanthi"** and **"The New Indian Express"** dated 24.01.2024 and also pointed out the EIA report and Executive summary are made available for public reference at respective Offices and informed that the project consultant on behalf of project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views, suggestions and queries of the public and reply by the project consultant will be recorded through videography / Audio and the same will be submitted to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

Also as per the guidelines stipulated in EIA Notification, 2006 M/s. Bradken India Private Limited, public hearing is being conducted for their proposed expansion of production capacity. He again welcomed the chairperson District Revenue Officer, general public and representative of Agriculture association etc., and he also informed that Mr. Rajendran, EIA Coordinator of Eco Tech labs India Pvt Ltd would make a detailed presentation about the proposed project, impact on pollution and the mitigation measures of the industry.

District Revenue Officer, Coimbatore District, has initiated the Public Hearing process and requested the project consultant to explain about their proposed project through power point presentation and requested the public to express their views and raise obtain necessary clarifications for their doubts. Main aim of this meeting is to register the public views related to Environment.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views and comments about the proposed Project. The views and suggestions of the public's are detailed below:

1. <u>Vijayakumar, Chettipalayam</u>

Bradken has constructed Kitchen, Toilet and compound wall to Primary school located in Samathuvapuram, Chettipalayam. They are giving job opportunities equally for both male & females. Holiday for 2 days per week is implemented. Moreover, they are giving better employment opportunities to local peoples and he appreciated the efforts by Bradken India Pvt Ltd.

2. <u>V. Ganesan, Kallapalayam</u>

He welcomed the gathering, I am Mr. V. Ganesan, President of Kallapalayam Panchayat and said the industry is located in their village boundary. He also said there are lot of industries in our village and no industry in this area are following the norms properly as listed here. Economic conditions have been improved and the company has done plenty of developmental activities under Corporate Social Responsibility (CSR) fund. He said he is not against the Pollution Control Board. Generally, industries are not following rules. He has proof in his phone and he is ready to show if necessary.

Now District Environmental Engineer intervened and said that this is the public hearing meeting of the proposed expansion of M/s. Bradken India Private Limited, if you want to make complaint about other industries you can come down to Pollution control board and lodge the complaint in Grievance meeting which is being held on 5th day of every month. Else you can meet Assistant Engineers or District Environmental Engineer

and make your complaint.

V Ganesan replied that sir, you are conducting the hearing meeting and give approval to the industries. From our Kallapalayam village we have given at least 10 to 15 petitions, and the nearby industries are burning the coconut shell continuously and the tyre industry emitting pollution across the village which results in the possibilities causing cancer in new born babies. Now District Environmental Engineer said to him to address his concerns about this company alone. V Ganesan replied that that company should act as per action plans suggested here. Again, District Environmental Engineer said to him as you should not talk like this and address your concerns about this company alone.

V Ganesan also said that the company won't extract ground water but they are using only ground water, they are not purchasing any water outside. They haven't brought the water from New Tirupur Development Corporation Limited. He added that no trees have been planted in the land marked for OSR area. Moreover, the company said they have done so many things to school, 30 lakhs contributed to desilt the pond but to which village they have done all these things, he questioned. DEE intervened and said this meeting is about the upcoming activities for the proposed project of the company.

V Ganesan continued, the companies are getting approval by conducting this kind of meetings, and make a photo shoot and publish in the newspaper to get the approval easily. In Kallapalayam village the tyre company emitting the pollution around the clock and no children and elders can dwell here.

Again, DEE intervened and told him to talk about the proposed project of Bradken and not to waste the time. Then V Ganesan asked to give all hard copies of the documents related to this proposed project and DEE assured to do so.

**3. <u>Viswanathan, Kallapalayam</u>**

He introduced himself as Viswanathan and his farm is located near the industry since the company was under Larsen & Toubro (L&T), due to pollution from the industry he doesn't get good yield of Coconut, Corn etc., planted in his farm and he has certain live stocks too. We are experiencing the polluted air in early morning itself. Moreover, since the company become an Australian company there is a continuous emission. Since wake

up, we used to breathe the emissions throughout the day. He also requests the officials to come and inspect the farms and intimate us what are the benefits to farmers around 2 kms radius by this company and let the public know the truth, he said. Moreover, the black particles are continuously depositing on the leaves of Coconut, Banana trees. Again, DEE intervened and told him to talk about this proposed project of Bradken only and we will give you opportunity to address your concerns and it isn't fair to intervene when we talk.

Viswanathan also informed that, the company allocating funds to the beneficial activities from their profit, and this land is not industrial land but it is agricultural land where we have to migrate. DEE said this is the draft plan about the proposed budget for developmental activities. Also we do necessary modifications by including your suggestions and requirements.

Viswanathan also informed that, if the company get approval for this project, then we will get only 10% of the benefits projected and we are only the victims. Now DEE intervened that you are expressing your concerns of first time only and did you file any complaint about this. Viswanathan said no complaints given by him. DEE said If you give complaint then we will come and inspect the site and take relevant actions.

**4. Ramalingam**

I am doing agricultural activities nearby the industry and said the industry is emitting high level of emissions in early morning and night so as his crops including ladies finger getting damaged and crops are looking in black colour. The company say that they control the emissions but the emissions always spreading into our houses and filled in our foods too. He also said he has the proof for the same. DEE requested them to give written complaint and necessary action will be taken.

**5. Balakrishnan, Kallapalayam**

He introduced himself as Balakrishnan a ward member of Kallapalayam Village. Agriculture is the primary profession in this area such as growing vegetables, fruits etc., Agriculturists are living in the surrounding area and main business is poultry & growing livestock. Only because of agriculture people can survive. People in the vicinity are almost farmers and their primary profession is agriculture, poultry, Live stocks etc. Within 10 Kms

there are plenty of live stocks, birds etc., live stocks and agriculture has been significantly affected due to tyre company and industries like Bradken industries and their emissions. He also requests not to give permission to this kind of industries and take necessary action on them to control the emissions. He also stated that the if the authorities permit this industry, they would take legal action and gather the public and fight. Besides he said the people won't allow this type of polluting industries.

6. <u>Rajkumar, Chettipalayam</u>

He introduced himself as Rajkumar and he welcomed this industry on behalf of Chettipalayam Panchayat. He also said this industry has done lot of developmental activities to this area including construction of compound wall to government school for the value of Rs. 22 Lakhs in Orathukuppai Village. Approximately 200 peoples living in the vicinity are working in this industry. This industry initially managed by L&T and becomes Bradken India Private Limited. They have done various developmental activities for Chettipalayam village Panchayat. He expressed his thanks to the industry on behalf of Chettipalayam village & and its public.

7. <u>Selvi, Chettipalayam</u>

She welcomed the gathering who are participating in this public hearing meeting and she came from Chettipalayam Village. She informed that this industry gives employment to lot of persons. They follow safety norms. The workers are working with safety shoes, Helmet, safety goggles etc. I am residing very nearer to the company and no emissions being noted as complained by others. She also added that the industry is helping a lot to Govt Schools in the vicinity like constructing compound walls, sanitation facilities etc.,

8. <u>Mrs. Narmadha, Head Master, Orattukuppai</u>

She welcomed the gathering and informed that she is head master of school in Orathukuppai Village. She also said the industry has constructed classes for the value of 25 lakhs. If the industry grows more, the schools in the vicinity also get upgraded and strength of the students also will be increased. He delivered her thanks to the industry and requests to do more developmental activities to the schools in the nearby village.

9. **Kalimuthu, Ward Councillor (Chettipalayam 5th ward)**

He welcomed the gathering and introduced himself as Kalimuthu 5th ward councillor of Chettipalayam Panchayat. He said that this industry was established 15 years ago and operated in the name of L&T for several years and now Bradken taken over the industry and doing plenty of beneficial activities in Chettipalayam Samathuvapuram village. They have constructed sanitation facility to the schools of Chettipalayam. However, the statement of the farmers is true but there is no disturbances or hindrances by this industry to the people compared to Charcoal & Tyre industries.

When the unit was under L&T they have initiated the desilting of tanks. Their key purpose is to increase the employment opportunities to the local people by increasing their production and they are treating local employees in a good manner. Besides he expressed his belief that the industry would follow the norms stipulated by Tamil Nadu Pollution Control Board. Public hearing is conducted only after establishment of this industry and he expressed his gratitude to the industry.

Employment should be given to local public. They extended their help during accident time. They have constructed building worth of 25 Lakhs to school. Till date 450 persons are employed. More people likely to be employed, number of working days are 5 out of 7 days in a week. They should function by properly operating air pollution control measures.

10. **V.Kasthuri, Chettipalayam**

She welcomed the gathering and said there is weekly six days work in other industries but in this industry, they offer 5 days work per week so that the local employees can do other jobs whenever they free.

11. **Sharmila Nancy, Kallapalayam**

She welcomed the gathering and informed that company offered 5 days work per week with good salary. She expressed her hope that after expansion of the industry they might get more salary and employment. Importantly they have enrolled for Insurance

policies to the workers.

Women workers feel very safe working environment in this industry compared to other industries. They are implementing any modifications only after consulting with their workers. They extract works in friendly manner.

12. Mohana priya, Orattukuppai

She said the management of the industry has constructed Toilets and classrooms for our school children and due to this industry, our village is significantly developed well.

13. Rajkumar, Kallapalayam

I am from kallapalayam Village, this industry is executing well even when it was under L&T and now Bradken. They are fulfilling all the needs of their workers. I have visited many countries for my profession, this industry is stringently following the standards like abroad, they are having efficient dust collector and disposing the dust properly. Safety shoes, eye, goggles and ear plugs have been provided to workers to ensure safety. Finally he delivered his wishes for the unit's expansion project.

14. Ramachandran, Kallapalayam

At the outset he welcomed all the dignitaries, officials and people gathering. He said the president of Kallapalayam village expressed his anxiety as no developmental activities have been done by the industry compared to Chettipalayam Village even though the industry is situated in the middle of both villages. He also endorsed the statement by president of Kallapalayam village. When the industry was established by L&T the workers were appointed as contract labours. But by the efforts by Deputy president Mr. Kanagaraj & Mr. Jambu, employees have been made permanent. We also solved the drinking water issue with the help of Company admin person Mr. Balavelusamy.

Meanwhile the Agricultural activists, President of Kallapalayam Village and ward members intervened him and informed that only supporters are permitted to speak and they boycotted the meeting. Moreover, they said they would take legal action on this.

Meantime DRO intervened and pacified the people and said all of your views will be considered and necessary action will be taken.

15. Mohanapriya, Orattukuppai

She said her house is located at a distance of 5 minutes' walk from the industry and the children and elders are suffering due to the air emissions, she is having banana trees too and leaves of the trees also become black. She asked the officials to come and inspect and expressed her grievance as where to migrate due to this industrial pollution. They can give employment to 200 or 1000 local persons and construct toilet to schools but they are making us victims.

16. Rajamanickam

He said the wind flowing predominantly towards eastern side of the industry so the people dwelling in eastern side gets affected severely. Meanwhile the people in western side talking favourably to the industry as they are enjoying the benefits by the company. He requests to control the existing air pollution and then go for expansion activities. He also expressed that he is not against the industry. Industry makes their worker to talk favourably about the industry without mitigating the pollution, Kallapalayam Village is getting affected, Chettipalayam Village is being developed with welfare activities. Finally, they boycott the meeting and left.

17. K. Kalimuthu, Orattukuppai

The only concern of Kavitha Ramachandran is that the industry is doing lot of beneficial activities only to Orathukuppai Village and not to Kallapalayam Village, she is not denying the statement of leader of Agricultural activists. Boycotting the meeting is not necessary. The company has never done any disturbance to the village people and I hope they also not disturb the public. Finally, he expressed his positive note to the public hearing meeting.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South requested Mrs.D.Pricilla, AE to deliver vote of thanks. She thanked Public, Environmentalists, NGOs and District Administration for convening the meeting peacefully DEE also informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project consultant are recorded through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Number of Petitions received – 2 Nos.

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Coimbatore South**

**Special District Revenue Officer,**
**LA, Airport**
**Coimbatore District**

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், ஒரத்துக்குப்பை கிராமம், கா.ச. எண். 51/1A, 51/1B, 53/1A, 53/2, 58/1, 58/2, 59/2A, 59/2B, 60, 61/2, 57/1A, 54, 55/3-ல் அமைந்துள்ள நி/ன். பிராட்கென் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உத்தேசிக்கப்பட்டுள்ள உற்பத்தி உயர்வு திட்டத்திற்கு கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், ஒரத்துக்குப்பை கிராமம், செட்டிபாளையத்தில் அமைந்துள்ள நி/ன். கே.பி.ஆர். திருமண மஹால் 26.02.2024 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள் :

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. B. அனிதா | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (விமான நிலைய நில கையகபடுத்துதல்) கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | Dr. R.சந்திரசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 3 | திருமதி. D. பிரிசில்லா | | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 4 | திரு. S. பிரபு | | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 5 | திரு. B. ராஜ்குமார் | : | டைரக்டர், பிராட்கென் இந்தியா பிரைவேட் லிமிடெட் |
| 6 | திரு. R.ராஜேந்திரன் | : | திட்ட ஆலோசகர், இகோ டெக் லேப்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் |
| 7 | பொதுமக்கள் | : | 90 எண்ணிக்கை |

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், ஓரத்துக்குப்பை கிராமம், க.ச. எண். 51/1A, 51/1B, 53/1A, 53/2, 58/1, 58/2, 59/2A, 59/2B, 60, 61/2, 57/1A, 54, 55/3 ல் அமைந்துள்ள நி/ன். பிராட்கென் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்தி உயர்வு திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த உயர்திரு. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொது மக்களையும் மற்றும் நி/ன் பிராட்கென் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன உரிமையாளர் அவர்களையும், கோவை மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006 ஆண்டு சுற்றுச்சூழல் தாக்கமதிப்பீட்டு அறிவிக்கையின்படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம். அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே தினதந்தி மற்றும் தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 24.01.2024 அன்று அறிவிப்பு வெளியிட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்படிருந்ததாக சுட்டிக்காட்டினார். மேலும் இத்திட்டம் தொடர்பாக பிராட்கென் இந்தியா பிரைவேட் லிமிடெட் சார்பாக திட்ட ஆலோசகர் திட்டத்தை பற்றி பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

14.09.2006 அன்று வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, குறிப்பிட்ட தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கத்திற்கான பொதுமக்கள் கருத்துகேட்பிற்கு பின்னரே அனுமதி அளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த பிராட்கென் இந்தியா பிரைவேட் லிமிடெட் இதனுடைய உற்பத்தி திறன் உற்பத்தி உயர்வு திட்டத்திற்கு

பொதுமக்களினுடைய கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தித்தரவுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் பொதுமக்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றுமுள்ள ஏனைய அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன். தற்பொழுது திட்ட ஆலோசகர் அவர்கள் இந்த தொழிற்சாலையினுடைய உற்பத்தி முறை மற்றும் அதனுடைய மாசினை கட்டுபடுத்துவதை பற்றி கூறுவார்கள் என தெரிவித்தார்.

நிர்வாகத்தின் நடவடிக்கைகளை பற்றியும், மாசினை கட்டுபடுத்தும் முறைகள் பற்றியும் இகோ டெக் லேப்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், திட்ட ஆலோசகர் Mr. R. ராஜேந்திரன் அவர்கள் காணொளி வாயிலாக விவரித்தார்.

அதன்பிறகு பொதுமக்கள் கருத்துக்களை கீழ்கண்டவாறு பதிவு செய்தனர்.

(1) <u>விஜயகுமார், செட்டிபாளையம்</u>.

பிராட்கென் நிறுவனம் செட்டிபாளையம் சமத்துவபுரத்தில், செட்டிபாளையம் ஆரம்பப் பள்ளியில் சமையலறை, கழிவறை மற்றும் சுற்றுசுவர் கட்டிக் கொடுத்துள்ளார்கள். பிராட்கென் நிறுவனத்தில் ஆண், பெண் இரு பாலருக்கும் சமமான வேலை அளிக்கப்பட்டு வருகிறது, வாரத்திற்கு இரு நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது, மேலும் உள்ளூர் பொதுமக்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது என்ற தகவலை, பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

(2) <u>வி கணேசன், கள்ளபாளையம்</u>

அனைவருக்கும் வணக்கம், நான் கள்ளப்பாளையம் பஞ்சாயத்து தலைவர், இந்த தொழிற்சாலை, எங்கள் கிராமத்தின் எல்லையில் தான் வருகிறது. எங்கள் கிராமத்தில் அதிகமான தொழிற்சாலைகள் இருக்கின்றன., இந்த அட்டவணையில் உள்ளவாறு எந்த தொழிற்சாலையும் செயல் படுவதில்லை, நான் மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு எதிர்ப்பாளர் கிடையாது, தொழிற்சாலையினால் அனைவருக்கும், பொருளாதாரம் உயர்கின்றது, விவசாயிகளுக்கு எல்லாம் பண்றீங்க, சி.எஸ்.ஆர்–ல் (CSR) நல்ல திட்டங்கள் செயலாற்றுகிறார்கள். அனைத்தும் சரி, இதுவரை எங்கள் கிராமத்தில் எந்த தொழிற்சாலையும் விதிகளை பின்பற்றி செயல்படவில்லை. இப்போது உங்களுக்கு தேவைப்பட்டால், என் கைபேசியில் உள்ள ஆதாரத்தினை கொடுக்கின்றேன்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள்:** இந்தக் கூட்டம் பிராட்கென் தொழிற்சாலையினுடைய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நீங்கள் இதர கம்பெனி பற்றி சொல்ல வேண்டும் என்றால், ஒவ்வொரு மாதமும், ஐந்தாம் தேதி, பொதுமக்கள் குறைகேட்பு கூட்டம் மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகத்தில் நடைபெறுகின்றது. அங்கு வந்து நீங்கள் மனு கொடுக்கலாம் அல்லது நீங்கள் தினந்தோறும், காலை 10 மணியிலிருந்து மாலை 5:45 மணிவரை உதவி பொறியாளரையோ, மாவட்ட பொறியாளரையோ சந்தித்து உங்கள் குறைகளை கூறலாம் என்று கூறினார்.

அதற்கு பஞ்சாயத்து தலைவர் நீங்கள் இது போன்று கூட்டங்கள் நடத்தி அனுமதி கொடுத்து விடுகிறீர்கள், நாங்கள் கள்ளப்பாளையத்திலிருந்து 10, 15 மனு கொடுத்திருக்கிறோம் என்றும், தேங்காய் தொட்டி எரித்து கொண்டு இருக்கிறார்கள் மற்றும் டயர் கம்பெனியில் டயர் எரித்து கொண்டு இருக்கிறார்கள், மொத்த புகையும், ஊருக்குள் வருகின்றது. வருங்கால சந்ததி அனைவருக்கும் கேன்சர் நோய் வரும் என்றார். அதற்கு மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர்நீங்கள் இந்த தொழிற்சாலையை பற்றி மட்டும் கூறுங்கள் என்றார்.

இந்த திட்ட அறிக்கையின் படி தான் செயல்படும் என்று, இந்த விவசாயிகளுக்கு இந்த திட்ட அறிக்கை நகலலினை எடுத்து கொடுங்கள். இந்த திட்ட அறிக்கையில், நிலத்தடி நீர் பயன்படுத்தவில்லை என்று கூறிவிட்டு, நிலத்தடி நீர் மட்டுமே பயன்படுத்துகிறார்கள், ஆனால், இதுவரை இவர்கள் சொல்லியபடி நியூ திருப்பூர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் ப்ராஜெக்ட்டில் சேரவில்லை. OSR–யின் படி மொத்த நிலப்பரப்பில் 33% நிலம் மரங்கள், தொழிற்சாலையில் வைத்துள்ளார்களா? என்று பாருங்கள். எந்த கிராமத்திலுள்ள பள்ளிகூடத்திற்கு 30 லட்சம் செலவு மற்றும் நீர்நிலை தூர்வாற உதவி செய்துள்ளார்கள். அதற்கு மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் இந்த கூட்டம் இனிமேல் செய்யக்கூடிய திட்டத்திற்கான விவரங்களை சொல்கிறார்கள்.

அதற்கு பஞ்சாயத்து தலைவர் இதுபோல கூட்டம் வைத்து அனுமதி வாங்கிட்டு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதில்லை, காணொளிக்காக நான்கு நபரை பேச செய்து, செய்தித்தாளில் விளம்பரம் செய்து அனுமதி வாங்கிவிடுகின்றனர். கள்ளப்பாளையம் பஞ்சாயத்தில் டயர் கம்பெனி புகை 24 மணி நேரமும் வெளியேறிக் கொண்டே இருக்கிறது, ஒரு குழந்தை கூட குடியிருக்க முடியாத சூழல் உள்ளது.

இதற்கிடையே சுற்றுசூழல் பொறியாளர் நீங்கள் இந்த திட்டத்தை பற்றி மட்டும் பேசுங்கள் நேரத்தை வீணடிக்காதீர்கள் என கேட்டு. கொண்டார்.

அதற்கு பஞ்சாயத்து தலைவர் இந்த திட்டத்தின் அறிக்கையை தங்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்

அதற்கு திட்ட அறிக்கையை தருவதாக மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் உறுதியளித்தார்.

(3) <u>விஸ்வநாதன், கள்ளபாளையம்</u>

இந்த பிராட்கென் தொழிற்சாலை முன்னர் L&T தொழிற்சாலையாக இருக்கும் போதில் இருந்தே நமது பூமி மற்றும் பக்கத்து தோட்டங்கள் அனைத்திலும் இந்த புகையினால் தென்னைமரம், வாழை, மக்காச்சோளம் எதுவுமே வளரவில்லை எனவும் காலையில் எழுந்தவுடனே புகையாக இருக்கின்றது எனவும், தற்போது ஆஸ்திரேலியா கம்பெனியாக மாறியதால் காலையில் இருந்து 24 மணி நேரமும் புகைகளை சுவாசிக்க வேண்டியுள்ளது என கூறினார். ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகள் பாதிப்படைவதாகவும் தென்னை மரம், வாழை மரங்களின் இலைகள் கருந்துகள்கள் படிவதாகவும் தாங்கள் நேரில் வந்து ஆய்வு செய்யுமாறும் கேட்டுக்கொன்டார். இந்த கம்பெனியினால் 2-Km சுற்றுவட்டாரத்தில் விவசாயத்துக்கு என்ன பயன் என்று நீங்கள் சொல்லுங்கள். பொது மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளட்டும் என்று கூறினார்.

அதற்கு மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் இந்த திட்டத்தை பற்றி மட்டும் கூறுங்கள் என்றார், உங்கள் கருத்துக்களை பதிவு செய்ய முழு வாய்ப்பும் கொடுக்கிறோம். நாங்கள் பேசும் பொழுது இடையே நீங்கள் பேசுவது சரியான பண்பாக இருக்காது என கூறினார்.

அதற்கு விஸ்வநாதன் தொழிற்சாலை லாபத்தில் பள்ளிகூடடத்திற்கு நல்லது செய்ய நிதி ஒதுக்குகிறார்கள். விவசாயத்திற்கு ஒதுக்கிய இந்த இடம் விவசாய நிலம் தான் தொழிற்சாலை நிலம் கிடையாது என்றும், நாங்கள் எங்கே குடிபெயர்வது எனவும் வினவினார்.

அதற்கு மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் இது மாதிரி திட்டம், உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினங்களுக்கான ஒதுக்கப்பட்டுள்ள தொகை, பொதுமக்களாகிய உங்களுடைய கருத்துகளை எல்லாம் கேட்டு அந்த கருத்துகளின்

அடிப்படையில் உங்களுடைய தேவைகளை பதிவு செய்து உங்களுடைய தேவைகளை நிறைவேற்ற நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்றார்.

அதற்கு விசுவநாதன் அவர்கள் அனுமதி வாங்கி விட்டார்கள் என்றால் இந்த உத்தேச வேலைகள் எல்லாம் செய்வது என்பது நூற்றுக்கு 10% மட்டுமே இருக்கும் எனவும், பாதிக்கப்படுவது பொதுமக்களாகிய நாங்களே என்றார்.

அதற்கு மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் நீங்கள் இப்பொழுது தான் முதல் முறையாக கூறு கிறீர்கள். நீங்கள் புகார் எதுவும் இதற்கு முன்னர் கொடுத்திருக்கிறீர்களா? என வினவினார். அதற்கு அவர் இல்லை என கூற, மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள், அவர்களை புகார் கொடுக்குமாறும் அதனடிப்படையில் துறை சார்ந்தவர்கள் வந்து ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என கூறினார்.

**(4) ராமலிங்கம்**

நான் பிராட்கென் கம்பெனியின் அருகில் விவசாயம் செய்து வருகிறேன். இந்த கம்பெனி அதிகாலை மற்றும் இரவில் அதிகப்படியான புகையினை வெளியிடுகிறார்கள் இதனால் வெண்டைகாய்கள் கருப்பாகவும் மற்றும் பயிர்கள் நாசமாகிறது. இவர்கள் புகையினை வெளியிடுவதில்லை என்று சொல்கிறார்கள் ஆனால் காலையிலும், இரவிலும் அதிகமாக வெளியேற்றுகிறார்கள். நாங்கள் தட்டில் சாப்பாடு போட்டு வைத்தாலும் சன்னல் வழியாக வரும் புகையினால் கருந்துகள்கள் விழுகிறது அதற்கான ஆதாரங்களை நான் வைத்துள்ளேன் என கூறினார்.

அதற்கு மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், உங்கள் கருத்துகளை எழுத்துவடிவில் எங்களுக்கு கொடுங்கள் அதனை நாங்கள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கிறோம் என்றார்.

**(5) பாலகிருஷ்ணன், கள்ளபாளையம்**

நான் கள்ளபாளையம் ஊராட்சி மன்ற உறுப்பினர், விவசாயம் என்பது அடிப்படை தேவை, மனிதர்கள் உயிர்வாழ காய்கறிகள், கீரைகள், பழவகைகள் தேவையாகும். ஆக விவசாயம் இருந்தால் மட்டுமே நாம் உயிர்வாழ முடியும், சுற்று வட்டாரத்தில் உள்ளவர்கள் எல்லாருமே விவசாயிகள் இவர்களின் பிரதான தொழில் விவசாயம் மற்றும் கோழிப்பண்ணை, 10 Km சுற்றளவில் கால்நடை, பறவையினங்கள் போன்ற உயிரினங்கள் அதிக அளவில் இருக்கிறது, டயர் கம்பெனி மற்றும் இதுபோன்ற கம்பெனிகள்

இருப்பதனால் அதிலிருந்து வெளிவரும் மாசினால் கால்நடைகள் முக்கியமாக விவசாயம் எல்லாமே மிகவும் பாதிப்படைகிறது, அதனால் நீங்கள் இதுபோன்ற கம்பெனிக்கு அனுமதி கொடுக்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், மேலும் இதற்கு அனுமதி கொடுத்தால் மக்களை திரட்டி போராட்டம் நடத்துவோம் என்று கடும் கண்டனத்தோடு கேட்டுக்கொள்கிறேன். சட்டரீதியாகவும் நடவடிக்கை எடுப்போம் மேலும் இதுபோன்ற தொழிற்சாலை வருவதற்கு நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) ராஜ்குமார், செட்டிபாளையம்

இந்த தொழிற்சாலை வருவதை செட்டிபாளையம் பேரூராட்சி சார்பாக வரவேற்கிறேன். இந்த தொழிற்சாலையினால் நிறைய நல்ல திட்டங்கள் ஏற்படுத்தியுள்ளனர், ஒரத்துக்குப்பை பகுதியில், ரூபாய் 22 லட்சம் செலவில் பள்ளி கட்டிடம் கட்டி தந்துள்ளனர், பள்ளிகளுக்கு சுற்றுசுவர் கட்டிதந்துள்ளனர். இந்த கம்பெனியில் செட்டிபாளையம் பகுதியில் வசிக்கக்கூடிய 200 மக்கள் வேலை செய்கிறார்கள். இந்த பிராட்கென் கம்பெனி முதலில் L&T கம்பெனியாக இருந்தபோதும் அதன் பிறகு பிராட்கென் வந்த பிறகும் செட்டிபாளையம் பேரூராட்சிக்கு நிறைய உதவிகளை செய்து வருகிறார்கள், செட்டிபாளையம் பேரூராட்சி மற்று செட்டிபாளையம் மக்கள் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்து கொள்வதகாவும் தெரிவித்தார்.

(7) செல்வி, செட்டிபாளையம்

எல்லாருக்கும் வணக்கம். நான் செட்டிபாளையத்தில் இருந்து வருகிறேன். எனது பெயர் செல்வி இந்த கம்பெனி நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கி இருக்கிறது. தலைகவசம், பாதுகாப்பு காலனி என பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்கிறார்கள் மற்றும் வேலைக்கு செல்பவர்கள் பாதுகாப்பாக சென்று வருகிறார்கள், நான் இந்த கம்பெனியின் அருகில்தான் இருக்கிறேன் இவர்கள் சொல்வதுபோல புகை எதுவும் வருவது இல்லை. உயர்நிலை பள்ளிகளுக்கு நல்ல குடிநீர், காம்பவுண்டு சுவர், அரசுபள்ளிகளுக்கு கழிப்பறைகள் என நிறைய உதவிகளை இந்த கம்பெனி செய்து வருகிறார்கள் என தெரிவித்தார்.

(8) **திருமதி. நர்மதா, பள்ளி தலைமை ஆசிரியர், ஓரத்துக்குப்பை:**

அனைவருக்கும் மதிய வணக்கம், நான் ஒரத்துக்குப்பை பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எங்கள் பள்ளிக்கு, 25 லட்சம் செலவில், வகுப்பறைகளை கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிறுவனம் மென்மேலும் வளர்ச்சி அடைந்தால், எங்கள் செட்டிபாளையத்தில் உள்ள பள்ளியில் தரம் உயர்த்தப்பட்டு, மாணவர் சேர்க்கையும் அதிகரிக்கும். நான் பிராட்கென் நிறுவனத்திற்கு, எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன், மென்மேலும் அவர்கள் இது போன்ற உதவிகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(9) **காளிமுத்து: செட்டிபாளையம் 5 வது வார்டு கவுன்சிலர்:**

நான் செட்டிபாளையம் பேரூராட்சி 5 ம் வார்டு கவுன்சிலர் காளிமுத்து. இந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு 15 வருடத்திற்கு மேல் இயங்கிவருகிறது. L&T என்ற பெயரில் சிறிது வருடங்கள் இயங்கி வந்தது. தற்போது பிராட்கென், அதனை வாங்கி நிறைய வேலைகளை செய்து, செட்டிபாளையத்தில் உள்ள சமத்துவபுரத்தில் நிறைய தேவைகளை செய்து வருகின்றனர். செட்டிபாளையத்தில் உள்ள பள்ளிகளுக்கு, கழிவறைகள், ஏற்படுத்தி கொடுத்துள்ளனர். விவசாயிகள் கூறிய கருத்துகள் உண்மை சம்பவங்களே ஆனால் தேங்காய் தொட்டி மற்றும் டயர் தொழிற்சாலைகள் போல் இந்த தொழிற்சாலையில் எந்தவொரு தொந்தரவுகளோ, இடையூறுகளோ யாரும் செய்ததில்லை.

L&T ஆக இருக்கும் போது குட்டைகளை தூர்வாரும் திட்டத்தினை, இப்பகுதியில், தொழிற்சாலையினால் துவக்கப்பட்டது. 15 வருடங்கள் வருடங்களாக இயங்கி வரும் இந்த தொழிற்சாலை தற்போது விரிவாக்கம் செய்வதன் நோக்கம், நிறைய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதே. மேலும், இந்த செட்டிபாளையத்தில், தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார்கள். தொழிற்சாலைகளில் வேலைக்கு வரும் தொழிலாளர்களை நல்லமுறையில் நடத்துகிறார்கள், மாசு கட்டுபாட்டு விதிமுறைகளை, இந்த தொழிற்சாலை மீறுவதில்லை என்று நாங்கள் நம்புகிறோம். இதுவரை, நல்ல முறையில் செயல்பட்டு வரும் இந்த தொழிற்சாலை, இனிமேலும் நல்ல முறையில் செயல்படும் என்று நாங்கள் நம்புகிறோம். பொதுமக்களிடம் கருத்துகேட்பு கூட்டம் என்பது இந்த தொழிற்சாலை வந்தபிறகே நடைபெறுகிறது. பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். விபத்து நடந்த போது நல்லபடியாக உதவி

செய்தார்கள். பள்ளிகூடத்திற்கு சுமார் 25 இலட்சம் செலவு செய்து கட்டிடம் கட்டியுள்ளார்கள். 450 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது. மேலும் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். ஐந்து நாள் வேலை இரண்டு நாள் ஓய்வு என்று கம்பெனி செயல்படுகிறது. மாசு கட்டுபாடு சாதனங்களை உரிய முறையில் இயக்கி செயல்படவேண்டும். இந்த தொழிற்சாலைக்கு நன்றி தெரிவித்துகொள்கிறேன்,

(10) <u>V.கஸ்தூரி, செட்டிபாளையம்</u>

அனைவருக்கும் வணக்கம், எல்லா தொழிற்சாலைகளிலும் வாரத்தில் ஆறு நாட்கள் வேலை உள்ளது. ஆனால், இங்கு ஐந்து நாட்கள் வேலை உள்ளதால், எங்களுக்கு மற்ற வேலைகளை செய்ய, ஏதுவாக உள்ளது.

(11)<u>சர்மிளா நான்சி, கள்ளபாளையம்</u>

வேலை நாட்கள், வாரத்தில் ஐந்து நாட்கள் என்பதால், எங்களுக்கு நிம்மதியாக உள்ளது. மேலும் சம்பளமும் நல்ல முறையில் உள்ளது. விரிவாக்கம் செய்வதால், மேலும் சம்பளம் மற்றும் வேலை வாய்ப்பு உயரும் என்று நம்புகிறோம். காப்பீடு திட்டங்கள், போன்றவைகளையும், ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள், மற்ற தொழிற்சாலைகளை விட, பெண்களுக்கு, இங்கு பாதுகாப்பாக உள்ளது. எந்தவொரு வேலையை செய்தாலும், தொழிலாளர்களிடம் கலந்தாலோசித்து அதனை கொண்டு வருகிறார்கள். எங்களை நட்புரீதியாக நடத்துகிறார்கள்.

<u>(12)மோகனப்பிரியா, ஓரத்துக்குப்பை</u>

எங்கள் பள்ளி குழந்தைகளுக்கு, கழிப்பறைகள் மற்றும் வகுப்பறைகளை, கட்டிக் கொடுத்துள்ளனர். இந்த தொழிற்சாலையினால், எங்கள் ஊர் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது.

(13)<u>ராஜ்குமார், கள்ளபாளையம்</u>

நான் கள்ளப்பாளையம் கிராமத்தில் இருந்து வருகிறேன். இவர்கள், முதலில் L&T ஆக இருந்தபோதும் சரி, தற்போது பிராட்கென் ஆக மாறிய போதும் சரி, தொழிற்சாலைகளை நல்லமுறையில் வைத்துள்ளனர். தொழிலாளர்களுக்கு, தேவையான அனைத்து வித தேவைகளையும், பூர்த்தி செய்கின்றனர். நான் பல்வேறு நாடுகளுக்கு, வேலை நிமித்தமாக சென்றுள்ளேன், அங்கு இருப்பது போல், அனைத்து மாசு கட்டுப்பாட்டு விதிமுறைககளை கடைபிடிக்கிறார்கள் மற்றும் தூசி சேகரிப்பான்

(dust collector) வைத்து இருக்கிறார்கள், மேலும் டஸ்ட்– தூசியினை சரியான முறையில் அப்புறப்படுத்து செய்கிறார்கள். உலக தரத்திற்கு, இவர்கள் விதிமுறைகளை பின்பற்றுகின்றனர். தொழிலாளர்களுக்கு உரிய காலணி, கண் கண்ணாடி மற்றும் காது அடைப்பான் ஆகியவற்றை வழங்கி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறார்கள். இவர்கள் விரிவாக்கத்திற்கு, நாங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

(14)<u>இராமச்சந்திரன், கள்ளபாளையம்</u>

இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்த அரசு உயர் அதிகாரிகள், பேரூராட்சி மன்ற தலைவர், கள்ளப்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர், விவசாயிகள், தொழிலாளர்கள், அனைவருக்கும் வணக்கம். கள்ளப்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர், தன்னுடைய ஆதங்கத்தை தெரிவிக்கிறார். இந்த தொழிற்சாலை செட்டிபாளையம், கள்ளப்பாளையம் இடையில் உள்ளது. ஆனால், இந்த கம்பெனி செட்டிபாளையத்திற்கு மட்டும் நலத்திடங்களை செய்கிறது கள்ளப்பாளையத்திற்கு செய்யவில்லை என்று கூறினார். அந்த ஆதங்கம் ஏற்றுகொள்ளப்படவேண்டியது, இந்த கம்பெனி ஆரம்பித்தல் L&T ஆக தொடங்கப்பட்டது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இப்போது இயங்கிகொண்டிருக்கிறது. ஆரம்பத்தில், அதில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் ஒப்பந்த ஊழியராக இருந்தனர், இப்போழுது துணைத்தலைவராக இருக்கும் கனகராஜ், ஜம்பு ஆகியோர் முயற்சியினால் இது மாற்றப்பட்டது. இப்பொழுது அட்மினாக இருக்கும், S பாலாவேலுசாமி என்னுடைய நண்பர் அவர் மூலமாக செட்டிபாளையம் கிராமத்தின் குடிநீர் பிரச்சனையை சரிசெய்தோம்.

இதனிடையே, மற்றவர்கள் அவர்களுக்கு சாதகமாக பேசவைக்கின்றனர் என்று கூறி விவ்சாயிகள் வெளிநடப்பு செய்தனர். மேலும் இதற்கு அனுமதி கொடுத்தால் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்போம் என்று கூறி வெளிநடப்பு செய்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் தயவுசெய்து அனைவரும் அமருங்கள், உங்கள் கோரிக்கைகளை பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என தெரிவித்தார்.

(15)<u>மோகனப் பிரியா, ஓரத்துக்குப்பை</u>

எங்கள் வீடு, இந்த கம்பெனியில் இருந்து 5 நிமிடம் நடந்து செல்லும் தூரம், இந்த கம்பெனி நல்லது செய்கிறது, ஆனால், எங்கள் வீட்டிற்கு அருகில் புகை வருகிறது நாங்கள் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் இருக்கிறார்கள். மேலும் வாழை மரங்கள் வைத்துள்ளோம். நீங்கள் வந்து பாருங்கள், அதன் இலைகள் கருப்பு நிறத்தில் இருக்கி ன்

றது, இந்த கம்பெனியினால் நாங்கள் வேறு எங்கு குடிபெயர்வது என்று சொல்லுங்கள். இவர்கள், புகை எங்களுக்கு வராமல் 200 இல்லை 1000 பேருக்கு கூட வேலைதரட்டும், இவர்கள், பள்ளிக்கூடம் கழிப்பறை போன்றவைகளை கட்டிகொடுக்கட்டும், எங்களுக்கு பாதிப்பு வரக்கூடாது என்று கூறினார்.

**(16)ராஜமாணிக்கம்**

பிராட்கென் கம்பெனி, அமைந்துள்ள இடம் கிழக்கு பக்கம் சரிவாக இருக்கும், காற்றும் கிழக்கு நோக்கி வீசுவதால், அதிகபடியாக கிழக்கு பகுதியில் புகை வீசும், இதனால், கிழக்கு பகுதியில் உள்ள மக்கள் பாதிக்கப்படைகின்றனர். ஆனால், மேற்கு பகுதியில் இருக்கும் மக்கள் பள்ளிக்கூடம் கட்டி பயனடைந்தவர்கள் நல்லதாக பேசுகின்றனர். பாதிக்கப்பட்டவர் அவர்களின் குறையை சொல்றோம் நாங்கள் வளர்ச்சி அடைவதில் குறைசொல்லவில்லை ஏற்கனவே இருக்கும் பிரச்சனையை சரிசெய்து பிறகு விரிவாக்கம் செய்யுங்கள் என்றுதான் கூறுகிறோம் இதனை கேட்காமல் கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்களை வைத்து பேசுவது நியாயமில்லை. கள்ளப்பாளையம் பகுதி பாதிப்படைகிறது, செட்டிபாளையம் பகுதியில் வளர்ச்சிபணிகள் நடைபெறுகிறது, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

**(17)K. காளிமுத்து, ஓரத்துக்குப்பை**

கள்ளபாளையம் கிராமத்திற்கு எதுவும் செய்யவில்லை என்றும், கம்பெனி அமைந்துள்ள ஓரத்துக்குப்பைக்கு மட்டும் நலத்திட்டங்களை செய்கிறார்கள், என்பதுதான் அவர்களின் ஆதங்கம் என்று கவிதா ராமச்சந்திரன் கூறினார்கள ளே தவிர, தலைவரை அல்ல. இதற்கு அவர்கள் வெளிநடப்பு செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த கம்பெனி, இதுவரை எந்தவித இடையூறும் செய்யவில்லை, இனிமேலும் எந்தவித இடையூறும் செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கையில், கம்பெனி விரிவாக்கத்திற்கு நடக்கும் இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு நாங்கள் முழு ஆதரவு அளிக்கிறோம்.

இறுதியாக திருமதி. பிரிசில்லா, உதவி பொறியாளர் அவர்கள்: இந்த கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகைதந்து தலைமைதாங்கி நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர், தங்கள் கருத்துகளை பதிவு செய்த பொதுமக்கள், பத்திரிகையாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் கோயம்புத்தூர் தெற்கு அலுவலகம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கோயம்புத்தூர் தெற்கு

மாவட்ட வருவாய் அலுவலர்
விமான நிலைய நில கையகபடுத்துதல்
கோயம்புத்தூர் மாவட்டம்.